மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தப் பரிந்துரைகளின்மீது தான் மத்திய அரசின் ஆலோசனைபேரில் இந்த வாரியமே அமைக்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 52... ..

திரு. எ.சி. நரசிம்மன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், இந்தக் கேள்வி 52-ஐக் கொடுத்துள்ள உறுப்பினர் தம் இடத்தில் இல்லை. அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரியானதுதான்.

அலுவலர் தேர்வுக்கழகத் தேர்வுகளுக்கான பயிற்சி பெற்றவர்கள்.

* 52 வினா —திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக்கழகம் நடத்தும் தேர்வு களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாசிகளுக்கு துவக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் 1971 டிசம்பர் வரை எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப் பட்டது ?

(இ) எத்தனை பேர் வெற்றி பெற்று வேலைவாய்ப்பைப் பெற்றனர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1970-ஆம் ஆண்டில் 167 ஆடவருக்கும் நான்கு பெண்டிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டில் 602 ஆடவருக்கும் 24 பெண்டிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

(இ) 1970-ல் பயிற்சி அளிக்கப்பட்டவருள் 29 ஆடவரும் இரண்டு பெண்டிரும் வெற்றி பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

1971-ல் பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் வெற்றி பெற்று வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்ற விவரங்கள் ஜூலைத் திங்கள் இறுதிக்குள் முடிவு செய்யப்படும் என தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம் தெரிவித்துள்ளது. அவ்விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

Encroachment of land in Chingleput district.

* 53 *Q.*—DR. H.V. HANDE : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Hon. Chief Minister has received a petition, dated 30th January 1972 from the residents of Valluvapakkam Village, Muthialpettai and Vanniarpettai in Chingleput district regarding encroachment by some persons in Survey No 3 ; and

(*b*) if so, the details thereof, and the action taken thereon ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், அய்யம்பேட்டை கிராமத்தில் சர்வே எண் 3-ல் உள்ள 1–47 ஏக்கர் நிலம் " வண்டிப் பாதை " புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி 1–42 ஏக்கர் பரப்பளவில் 22 செண்ட் நிலத்தில் 13 பேர் குடியிருப்பிற் காகக் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தற்போது ஆக்கிரமிப்பு செய்துள்ள மேற்படி 22 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு ஒப்படை செய்யும் பொருட்டு காஞ்சிபுரம் தாசில்தார் நடவடிக்கை எடுத்தார். மேற்படி ஆக்கிரமிப்பானது வள்ளுவப்பாக்கத்தி லிருந்து அய்யம்பேட்டைக்குச் செல்லும் பாதையையும் அய்யம்பேட்டை வழியே பெருஞ்சாலைக்குச் செல்லும் பாதையையும் இடைமறிக்கின்றது என்றும், மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்றும் தெரிவித்து வள்ளுவப்பாக்கம் கிராமத்தினர் காஞ்சிபுரம் தாசில்தாருக்கு மனு ஒன்றை அனுப்பினர். ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடமிருந்து சிறிது நிலத்தையும் வள்ளுவப்பாக்கம் கிராமத்தின் நத்தம் புறம் போக்கிலிருந்து சிறிது பட்டா நிலத்தையும் எடுத்துக்கொள்வதன் மூலம் நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதென இப்போது கருதப்படுகிறது. மேற்படி ஏற்பாட்டிற்கு வள்ளுவப்பாக்கம் கிராமத்தினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

Salem Steel Plant.

* 54 Q.—THIRU N. K PALANISWAMY, THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India propose to form a company for the Salem Steel Plant ; and

(*b*) if so, whether this Government has requested for a share in the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சேலம் ஸ்டீல் லிமிடெட் என்ற பெயரில் ஒரு தனி கம்பெனி நிறுவப்பட்டு விட்டது.

(இ) இல்லை.

* 55—*Q.* THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide alternative sites for the persons in Salem whose lands have been acquired for the starting of a Steel Plant ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.